**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**OS 166/2017**

04.07.2025

பி.**<u>வா.சா.1 பெரியசாமி த/பெ. மாரிமுத்து அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை .</u>**

வாதி தாக்கல் செய்த வழக்கு விபரம் எனக்கு தெரியும். வழக்கு சொத்தை எப்போது கிரயம் வாங்கினேன் என்றால் 30.10.2017 ல்கிரயம் வாங்கினேன். 04.08.2017 ல் வாதி எனக்கு சொத்தை கிரயம் வாங்ககூடாது என்று வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினார் என்றால் எனக்கு அப்படி எந்த அறிவிப்பும் வரவில்லை. அந்த அறிவிப்பானது எனக்கு கிடைக்கப்பெற்று அதை நான் 07.08.2017 ல் பெற்றுக்கொண்டேன் என்பதை காட்டுவற்கான ஒப்புதல் அட்டை தான் வா.சா.ஆ. 14 என்றால் சரியல்ல. சொத்தை கிரயம் வாங்குதற்கு முன்பே அறிவிப்பு எனக்கு அனுப்பப்பட்டு அந்த அறிவிப்பை நான் பெற்றுக்கொண்டு தற்போது பெற்றுக்கொள்ளவில்லை என்றும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்தபிறகாவது வழக்கு சொத்து யார் யாருக்கு சொந்தம் என்று தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதியின் மகன் 3 ம் பிரதிவாதியிடமிருந்து கிரயம் வாங்கியுள்ளேன். சொத்திற்குண்டான அசல் ஆவணங்களை நான் பார்த்துள்ளேன். அந்த அசல் ஆவணங்கள் என்னிடம் தான் உள்ளது. சொத்திற்குரிய முதல் பத்திரமானது 22.02.2017 செட்டில்மெண்ட் ஆவணத்தை தான் நான் குறிப்பிடுகிறேன் என்றால் சரிதான். அந்த சொத்தின் ஒருபகுதியை தான் 30.10.2017 ல் கிரயம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு கிரயம் கொடுக்கப்பட்ட சொத்திற்குரிய கிரய பத்திரத்தில் முன்னால் உரிமையாளர் சேவு , குப்பம்மாள் தம்பதியரின் மகன் ராஜகோபாலுக்கு சொத்து சொந்தம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 30.08.1959 லே குப்பம்மாள் பெயருக்கு கிரயம் பெற்ற கிரயஆவணம் மூலம் கிடைக்கபெற்றது என்றும் வாதி உள்ளிட்ட வாரிசுகளின் தாவா சொத்தை நான் கிரயம் பெறகூடாது என்பதற்காக தான் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி குப்பம்மாள் பெயரில் உள்ள கிரயபத்திரத்தை நீதிமன்றத்திலிருந்து எடுத்து பார்த்து தெரிந்துகொண்டேனா என்றால் தற்போதுவரை அதைபார்க்கவில்லை. மனையை ரூ. 14,20,000/- ற்கு வாங்கினேன். அந்த தொகையை எனக்கு கிரயம் கொடுத்தவரிடம் கொடுத்துவிட்டேன். வாதிகள் அவர்களுக்குரிய பாகத்தையும் சேர்த்து நான் கிரயம் பெறக்கூடாது என்ற அறிவிப்பை அனுப்பியும் வாதியின் பாகத்தையும் சேர்த்து நான் கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கிரயம் பெற்றபின்பு பட்டா எப்போது மாற்றினேன் என்றால் தேதி நினைவில்லை அந்த பட்டா சட்டமுரணானது என்றால்சரியல்ல. சொத்திற்கான வில்லங்கம் எத்தனை ஆண்டுகளுக்கு போட்டு பார்த்தேன் என்றால் 30 ஆண்டுகளுக்கு போட்டு பார்த்தேன். ஏற்கனவே குப்பம்மாள் பெயரில் கிரய பத்திரம் இருப்பதை தெரிந்துகொண்டேன் 1959 ஆண்டிலிருந்தே வில்லங்கம் எடுத்துபார்க்காமல் 30 ஆண்டுகளுக்கு மட்டும் வில்லங்கம் போட்டு பார்த்தேன் என்றால் சரியல்ல. நான் கிரயம் வாங்கியதாக சொல்லும் தொகையே மோசடியான என்றாலும் அதிகதொகைகொடுத்து வாங்கினேன் என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்து என்னுடைய அனுபவத்தில் உள்ளது

என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. வாதியின் பாகத்தையும் சேர்த்து நான் கிரயம் வாங்கியுள்ளதால் என்னுடைய கிரயம் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. எனக்கு கிரயம் கொடுத்த 3 ம் பிரதிவாதி செட்டில்மெண்ட் ஆவணத்தை தவிர்த்து வேறு என்ன ஆவணத்தை காட்டினார் என்றால் பட்டா, சிட்டா காட்டினார். அந்த பட்டா , சிட்டாவை எனக்கு தரவில்லை. வழக்கு சொத்தின் நான்கு எல்லை என்னவென்று கேட்டால் ரோட்டுக்கும் ரவிஇடத்திற்கும் கிழக்கு , வீரத்துரை ரவிச்சந்திரன் நிலத்திற்கும் வடக்கு , ஜெயலட்சுமி நிலத்திற்கு கிழக்கு, தங்கவேல் வகையறாவின் நிலத்திற்கு தெற்காக உள்ளது. தாவா சொத்தின் முழுவிஸ்தீரணம் தெரியாது. வழக்கு சொத்தின் முழுவிபரமும் தெரியாது என்றாலும் சொத்துவிபரம் எதுவும் தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி எங்கு வசிக்கிறார் என்றும் எனக்கு தெரியாது. ராஜேகோபால் தற்போது எங்கு வசிக்கிறார் என்று எனக்கு தெரியாது. எனக்கு விற்பனை செய்தது ரவிச்சந்திரன். ஆறுமுகம், லட்சுமி, கோவிந்தம்மாள் ஆகியோர்களை எனக்கு தெரியாது. வழக்கு போட்டப்பின்பாவது குப்பம்மாளின் வாரிசுகள் யார் என்று தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. ஆகவே வாதிகுறிய பாகத்தையும் சேர்த்து நான் வாங்கிய கிரயம் செல்லாது என்றாலும் சரியல்ல. என்பெயரில் உள்ள கிரயபத்திரத்தையும் அசலையும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை அதற்கு காரணம் எதுவும் இல்லை. வழக்கு சொத்திற்கு பட்டாவானது இந்த வழக்கு தாக்கல் செய்தபின்பு 13.09.2021 ல் மாறியது என்றால் சரிதான். மேற்படி பட்டாவானது 13.09.2021 ல் மனுகொடுத்து எந்த விசாரணையும் இல்லாமல் அன்றைதினமே பட்டாமாறிவிட்டது. பட்டாவானது நாளது தேதிவரை ரவிச்சந்திரன் மற்றும் என்பெயரில் உள்ளது என்றால் சரிதான். ஆகவே வாதிகளின் உரிமைகளை மறைத்து நான் பெற்ற கிரயமும் செல்லாது அந்த கிரயத்தை அனுசரித்து என் பெயரில் மாற்றம் செய்யப்பட்ட பட்டாவும் செல்லாது என்றால் சரியல்ல. வாதி உள்ளிட்ட மற்றபாகஸ்தர்களுக்கு அவர் பெற்றோர் வழி வந்த சொத்தை பாகம் செய்துகொள்வதில் ஆட்சேபணை உள்ளதா என்றால் சொத்தை முழுவதையும் வாங்கிவிட்டேன். நான் வாங்கிய கிரயமே செல்லாது என்றும் வாதிக்கு வழக்குபடி தீர்பாணை வழங்கவேண்டும் என்றால் சரியல்ல. நான் மற்றபாகஸ்தர்களுக்கு உரிய உரிமைகளையும் தெரிந்துகொண்டு நல்லெண்ணத்தின் அடிப்படையில் கிரயம் பெற்ற நபர் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல.

சார்பு நீதிபதி,

மன்னார்குடி